# Song Sheet

## (1)தம்கிருபை பெரிதல்லோ

தம்கிருபை பெரிதல்லோ
எம்ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அதுபோதுமே
சுகமுடன் தம்பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என்பாவம் நீங்கினதே
நித்தியஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே

3. தினம்அதிகாலையில் தேடும் புதுகிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம்கிருபை தாருமே

## (2)துதித்துப் பாடிட பாத்திரமே

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

4. இந்த வனாந்தர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே

## (3)தேவ கிருபை என்றுமுள்ளதே

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றி துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர்தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாது காத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

5. வெள்ளம்போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியமும் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது

6. நித்திய தேவனாம் சத்தியபரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே

## (4)நீர் மாத்ரம் போதும்

யேகோவாயீரே தந்தையாம் தெய்வம்
நீர்மாத்ரம் போதும் எனக்கு
யேகோவாரப்பா சுகம் தரும் தெய்வம்
உம்தழும்புகளால் சுகமானோம்
யேகோவாஷம்மா என்கூட இருப்பீர்
என்தேவை எல்லாம் சந்திப்பீர்

நீர்மாத்ரம் போதும், நீர்மாத்ரம் போதும்
நீர்மாத்ரம் போதும் எனக்கு ( 2 )

2. யேகோவா ஏலோயீம் சிருஷ்டிப்பின் தேவனே
உம்வார்த்தையால் உருவாக்கினீர்
யேகோவாபரிசுத்தர் உன்னதர்நீரே
உம்மைப்போல் வேறு தேவனில்லை
யேகோவாஷாலோம் உம்சமாதானம்
தந்தீர்என் உள்ளத்தினில் --- நீர்மாத்ரம்

3. இயேசுவே நீரே என்ஆத்ம நேசர்
என்மேல் எவ்வளவன்புகூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம்அன்பிற்கு இணையில்லையே
என்வாழ்நாள் முழுதும் உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும் --- நீர்மாத்ரம்

## (5)எந்தன்உள்ளம்தங்கும்இயேசுநாயகா

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்ச கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனிநான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா

# Song Sheet

### (6) எண்ணி எண்ணி துதிசெய்வாய்

எண்ணி எண்ணி துதிசெய்வாய்
எண்ணடங்காத கிருபைகளுக்காய்
இன்றும் தாங்கும் உம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே

1. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்பில் பதறாதே,
கண்மணிப்போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைத்தாரே!

2. யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விஸ்வாச சோதனையில்

3. உனக் கெதிராகவே
ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசர்க்கு நீதியவர்

### (7) காக்கும்வல்ல மீட்பர் உண்டெனக்கு

1. தொல்லைகஷ்டங்கள் சூழ்ந்திடும் துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில்துன்பம் நேர்ந்திடும் இருளாய்த்தோன்றும்எங்கும்
சோதனைவரும் வேளையில் சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்துஜெயம்வரும் பரன்உன்னைக் காக்க வல்லோர்

காக்கும் வல்லமீட்பர் உண்டெனக்கு உண்டெனக்கு
உண்டெனக்கு
காக்கும் வல்லமீட்பர் உண்டெனக்கு காத்திடுவார் என்றுமே

2. ஐயம்மிருந்ததோர் காலத்தில் ஆவிகுறைவால்தான்
மீட்பர்உதிரபெலத்தால் சத்துருவை வென்றேன்
என்பயம் யாவும் நீங்கிற்றே இயேசு கைதூக்கினார்
முற்றும் என்னுள்ளம்மாறிற்று இயேசென்னைக்
காக்கவல்லோர்

3. என்னவந்தாலும் நம்புவேன் என்நேசமீட்பரை
யார்கைவிட்டாலும் பின்செல்வேன் எனதுஇயேசுவை
அகலஆழ உயரமாய் எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும் என்னைக் கைவிடமாட்டார்

### (8) உயரமும் உன்னதமும்ஆன

1. உயரமும் உன்னதமும்ஆன
சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
சேனைகளின் கர்த்தர்ஆகிய
ராஜாவை என்கண்கள் காணட்டும்

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் (3)
பரிசுத்தர் பரிசுத்தரே (2)

2. ஒருவராய் சாவாமையுள்ளவர் இவர்
சேரக்கூடா ஒளிதனில் வாசம் செய்பவர்
அகிலத்தை வார்த்தையால் சிருஷ்டித்தவர்
இயேசுவே உம்மையே ஆராதிப்பேன்

3. ஆதியும் அந்தமுமானவர் இவர்
அல்பாவும் ஒமேகாவுமானவர் இவர்
இருந்தவரும் இருப்பவரும்
சீக்கிரம் வரப்போகும் ராஜா இவர்

4. எல்லா நாமத்திலும் மேலானவர்
முழங்கால்கள் முடங்கிடும் இவருக்குமுன்
துதிகனமகிமைக்கு பாத்திரரே
தூயவர் இயேசுவை உயர்த்திடுவேன்

### (9) உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல

உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
உம்தயை என்னைக் கைவிடல (2)
வெறுங்கையாய் நான் கடந்துவந்தேன்
இருபரிவாரங்கள் எனக்குத்தந்தீர் (2)

ஏல்-எல்லோகே ஏல்-எல்லோகே ஏல்-எல்லோகே
உம்மைத் துதிப்பேன்

காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காக இறங்கி வந்தீர் (2)
உடன்படிக்கை என்னோடு செய்து
இழந்திட்ட யாவையும் திரும்பத்தந்தீர் (2) --- ஏல்

வேண்டினோரெல்லாம் விடைபெற்றபோதும்
வேண்டியதெல்லாம் எனக்குத்தந்தீர் (2)
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக மாற்றித்தந்தீர் (2) --- ஏல்

### (10) வாக்குப்பண்ணினவர் மாறிடார்

வாக்குப்பண்ணினவர் மாறிடார்
வாக்குத்தத்தம் நிறைவேற்றுவார்

சோர்ந்துபோகாதே - நீ சோர்ந்துபோகாதே
சோர்ந்துபோகாதே
உன்னைஅழைத்தவர் உண்மையுள்ளவர்

1. காலங்கள் கடந்ததோ தாமதம்ஆனதோ
வாக்குத்தத்தங்கள் உன்வாழ்வினில் தொலைந்ததோ
வாக்குத்தந்தவர் சிறந்தவர் சிறந்ததை தருபவர்
ஏமாற்றங்கள் இல்லையே

2. அவர் மனிதன் அல்லவே பொய் சொல்வதில்லையே
அவர் உண்மையுள்ளவர் வாக்கு மறப்பதில்லையே
வாக்குத்தந்தவர் சிறந்தவர் சிறந்ததை தருபவர்
ஏமாற்றங்கள் இல்லையே

### (11) என் தேவன் என் வெளிச்சம்

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக் கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
அன்பர் இயேசென்னை ஏற்றுக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
தலைமேலேற்றி என்னை உயர்த்திடுவார் – என்

2. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
என் தேவன் அருகில் வந்து என்னைக் காத்து நின்றார்
என்னைப் பகைத்தவர்கள் உடனே அழிவாரே – என்

Ask of Me, and I will give *You* The nations for Your inheritance, And the ends of the earth for Your possession.



Psalm 2:8